ஜனவரி மற்றும் பிப்ரவரி 2016 –ஆம் மாதங்களுக்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of January and February 2016)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–600 009.

கடிதம் எண்.1061/ ப.க2(2)/2016–1, நாள்– 05.02.2016

அனுப்புநர்
திருமதி. த. சபிதா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்டக் கருவூல/ சார் கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – தற்காலிக பணியிடங்கள் – மேல்நிலை தொழிற்கல்வி – 680 தொழிற்கல்வி பயிற்றுநர் பணியிடங்கள் – 01.10.2015 முதல் ஐந்தாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க கருத்துரு பெறப்பட்டுள்ளது – ஜனவரி மற்றும் பிப்ரவரி 2016 மாதங்களுக்கு ஊதியம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.8.1997.
2. அரசாணை(1டி) எண்.256, பள்ளிக் கல்வி(ப.க2(2) துறை, நாள்– 02.12.2014.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.81145/எல்/இ3 2015, நாள்–06.01.2016.

*******

பார்வை 1ல் காணும் அரசாணையில் மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்கள் (DTERT) மூலம் குறுகிய கால பயிற்சி பெற்ற பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வர உபரியாக இருந்த 702 இடைநிலை ஆசிரியர்களை தேவைக்கேற்ப சரண் செய்து, அதற்கு பதிலாக, 702 தொழிற்கல்வி ஆசிரியர்கள் நிலை–2 பணியிடங்கள் ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, அப்பணியிடங்கள் தேவைக்கேற்ப கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்பட்டது.

| அரசாணை எண் மற்றும் நாள் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் | தோற்றுவிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வி நாள் 18.8.1997 | 557 | 05.10.1996 முதல் |
| அரசு கடிதம் (நிலை) எண்.221, பள்ளிக் கல்வி, நாள் 15.7.1999. | 111 | 12.11.1997 முதல் |
| அரசாணை (நிலை) எண்.46, பள்ளிக் கல்வி, நாள் 12.9.2006. | 12 | 08.12.1999 முதல் |
| மொத்தம் | 680 பணியிடங்கள் | |

2. மேற்காணும் 680 தொழிற்கல்வி பயிற்றுநர் பணியிடங்களுக்கு பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி 01.10.2014 முதல் 30.09.2015 முடிய தற்காலிக நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் தற்காலிக பணியிடத்திற்கு 30.09.2015வுடன் தொடர் நீட்டிப்பு காலம் முடிவடைந்துள்ளது. 01.10.2015 முதல் 31.12.2015 வரை மூன்று மாதங்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜனவரி 2016 முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார். பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து தொடர் நீட்டிப்பு கோரி கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

3. மேற்கண்ட நிலையில் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, 680 தொழிற்கல்வி பயிற்றுநர் பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் ஜனவரி மற்றும் பிப்ரவரி 2016 மாதங்களுக்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.680/Edn-II/2016, நாள்– 03.02.2016–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

சா. பரிமளவல்லி 5/2/16

அரசு முதன்மைச் செயலாளருக்காக

5/2/16

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.

நிதி(கல்வி–II)துறை , சென்னை–9,

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.